# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 15 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 14 புதன்கிழமை (29-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 29


# பாதுகாப்பு ஏற்பாடு கொழும்பில் தீவிரம்!

## பல இடங்களிலும் வீதிச்சோதனை

கொழும்பு, டிசெம்பர் 29

நாளை மறுதினம் நள்ளிரவு புத்தாயிரமாம் ஆண்டு பிறப்பதை ஒட்டி தலைநகர் கொழும்பில் பல்வேறு இடங்களிலும் கோலாகல நிகழ்ச்சிகளும் கொண்டாட்டங்களும் நடக்க இருக்கையில், பெரும் குண்டுத் தாக்குதல் ஏதும் நடத்தப்படலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

இதனை ஒட்டி நேற்று முதல் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நகரின் பல பகுதிகளிலும் நேற்று வீதித் தடைச் சோதனைகள் முடுக்கி விடப்பட்டன. சுற்றிவளைப்புத் தேடுதல்களும் ஆங்காங்கே இடம் பெற்றன. சந்தேகத்துக்குரியவர்கள் வழிமறிக்கப்பட்டு துருவித் துருவி விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். வாகனங்களும் தீவிர சோதனைக்கு உள்ளாகுகின்றன.

புத்தாயிரமாம் ஆண்டுப் பிறப்பு நிகழ்வையொட்டி மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடும் இடங்களின் பாதுகாப்புக் குறித்து மிக விழிப்பாக இருக்கும்படி பாதுகாப்புப் பிரிவினருக்கு அரசு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

சனிக்கிழமை இரவு வரை பாதுகாப்புக் கெடுபிடிகள் மேலும் தீவிரமடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ஈ.பி.டி.பியின் உறுப்பினர் சுட்டுக் கொலை

அம்பாறை, டிசெ. 29

அம்பாறை மாவட்டம்— நிந்தவூர் பகுதியில் வைத்து ஈ.பி.டி.பி. உறுப்பினரான தர்மலிங்கம் நிமலதாஸன் (வயது 29—அக்கரைப்பற்று) என்பவர் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே இவர் ஈ.பி.டி.பி. அமைப்பில் இணைந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-7-14)

# ராஸிக் குழுவின் சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு, டிசெ. 29

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியிலுள்ள கோழிப்பண்ணைக்குப் பின்புறமாகப் பதுங்கியிருந்த ராஸிக் குழுவினர் நேற்றுக் காலை 9-30 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றொருவர் காயமடைந்தார்.

உயிரிழந்த மயிலம்பாவெளியைச் சேர்ந்த செம்பாபொடி நந்தகுமார் (வயது 26) என்பவரின் சடலத்தையும் படுகாயமடைந்த அழகப்பொடி ரமேஸ் (வயது 25) என்பவரையும் ராஸிக் குழுவினர் பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (உ-5-21)

# பொலீஸார் மீது ஏறாவூரில் சூடு

மட்டக்களப்பு, டிசெ. 29

ஏறாவூர் சதாம் உசைன் கிராமத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்களில் தனித் தனியாகச் சென்ற பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டினை அடுத்து பொலீஸார் மோட்டார் சைக்கிள்களை கைவிட்டுத் தப்பியோடினர். மோட்டார் சைக்கிள்களை பின்னர் புலிகள் எடுத்துச் சென்று விட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-5-21)

# வவுனியா அதிர்கிறது

ஓமந்தைப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியை நோக்கி நேற்று இரவு 8·30 மணி முதல் நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலினால் வவுனியா நகரம் அதிர்ந்தது. சேத விவரங்கள் பற்றிய தகவல்கள் ஏதும் உடனடியாகக் கிடைக்கவில்லை. (உ-5-164)

# 126 பேருக்கு தொலைபேசி

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடமாகாண மீள் குடியேற்ற அதிகார சபையினால் டிசெம்பர் முதலாம் திகதி தொலைபேசி இணைப்புக்கான அனுமதி வழங்கப்பட்ட 126 பேரின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன.

இப் பெயர் பட்டியல் உதயன் அலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. (உ-5)

# கரை ஓரங்கள் மீது நேற்று ஷெல் வீச்சு

## கொழும்புத்துறையில் ஒருவர் காயம்

பூநகரிப் பகுதியில் இருந்து புலிகள் ஏவியதாகக் கருதப்படும் ஷெல்கள் நேற்று சாவகச்சேரி, நாவற்குழி, செம்மணி, நெடுங்குளம், கொழும்புத்துறை ஆகிய கரையோரப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

நேற்றிரவு 8 மணியளவில் கொழும்புத்துறைப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் எஸ். குகபாலன் (வயது 48) என்பவர் காயமடைந்தார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 1-30 மணியளவில் சாவகச்சேரிக்கு அருகே கச்சாய் வீதியிலுள்ள உதயசூரியன் ஒழுங்கைப் பகுதியிலும்—

சற்றுப் பின்னர், நகர சந்தைக்குப் பின் புறம் உள்ள விளையாட்டு மைதானப்பகுதியிலும்—

ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இதனால் சாவகச்சேரி நகரப் பகுதிக் கடைகள் யாவும் உடனடியாக இழுத்து மூடப்பட்டு நகரம் வெறிச்சோடியது.

இந்தத் தாக்குதல்களினால் படையினருக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ-5-31-17-51-30)

# கொழும்பில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, டிசெ. 29

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றிரவு 10 மணியளவில் பலத்த சத்தம் மற்றும் பெரும் அதிர்வுடன் குண்டு ஒன்று வெடித்ததால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

பெர்னாண்டோ வீதியில் உள்ள வீடொன்றில் தேடுதல் நடத்திய பொலீஸார் அங்கிருந்து மீட்ட குண்டு ஒன்றையே பாதுகாப்புக் கருதி அப்பிரதேசத்தில் வைத்தே வெடிக்க வைத்ததாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

# தனங்களப்பில் புகைமண்டலம்!

பூநகரிப் பக்கத்திலிருந்து புலிகள் நடத்தும் ஷெல்களின் தாக்குதல்களுக்கு தொடர்ந்து இலக்காகி வரும் தனங்களப்புப் பகுதியில் நேற்று நண்பகலுக்குப் பின் பெரும் புகை எழுந்ததை, அங்கிருந்து சுமார் 2 மைல் தொலைவில் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து அவதானிக்க முடிந்ததாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகள் மீது அடிக்கடி வட்டமிடும் ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில்—

தனங்களப்பு, கோகிலாக்கண்டி மற்றும் அரியாலை கிழக்குப் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பீரங்கி மற்றும் விமானத் தாக்குதல் காரணமாக ஆறு புலிகள் உயிரிழந்தனர் எனவும்—

படையினர் தரப்பில் 2 பேர் உயிரிழந்ததுடன் 26 பேர் காயமடைய நேரிட்டது எனவும்—

பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (உ-7-5-31)

# கண்ணியில் சிக்கிய 'இன்ரசிற்றி'

வவுனியா, டிசெ. 29

வவுனியா ரயில் நிலையத்திலிருந்து தெற்கே சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மதகுவைத்த குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் 'இன்ரசிற்றி' ரயில் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் அந்த ரயிலின் என்ஜினும் ஏனைய ஏழு பெட்டிகளும் தடம்புரண்டன. இரு சாரதிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் பயணிகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

'லங்கா முடித்த' கப்பலில் திருகோணமலைக்கு புறப்பட்டுச் செல்வதற்காக நேற்று யாழ். ரயில் நிலையத்துக்கு வந்த எண்ணூறுக்கும் அதிக பயணிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

நேற்று இக்கப்பலில் பயணிப்பதற்காக நேற்று முன்தினமே இப் பயணிகளுக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் டிக்கெட் வழங்கியிருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் எவரையும் ஏற்றாமலேயே கப்பல் திருமலைக்குப் புறப்பட்டு விட்டதாகத் தெரியவந்தது.

இவ்வார முற்பகுதியில் இக்கப்பலில் திருமலையிலிருந்து இங்கு வரவிருந்த பொதுமக்களும் இக்கப்பல் அங்கிருந்து புறப்பட்ட சமயம் ஏற்றப்படவில்லை. அவர்களும் ஏமாற்றத்துடன் வீடுகளுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஹெலி வேட்டால் அரியாலையில் குடிசை எரிந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 29

கிழக்கு அரியாலை, நெடுங்குளம் பகுதிகள் மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் வட்டமிட்ட ஹெலிக்கொப்ரர் ஒன்று கரையோரப் பகுதிகளைநோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததோடு றொக்கட் குண்டுகளையும் ஏவியது.

இத்தாக்குதலுக்கு இலக்காகி நெடுங்குளத்தில் குடிசை ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமானது. மற்றொரு குடிசையில் பற்றிய தீ அணைக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயம் குடிசையில் எவரும் இருக்காததால் உடல், உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (உ-5-51-17-30-15-139)

# ஆயர் குழு தாழையடிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ 29

யுத்தச் சூழல் நிலவும் வடமராட்சி கிழக்கு, தாழையடிப் பகுதிக்கு யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையிலான குழு ஒன்று நேற்று விஜயம் செய்தது. அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை இக்குழு கேட்டறிந்தது.

யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு செல்வராசா அடிகளார், சென் பற்றிக் கல்லூரி அதிபர் அருட்திரு பேர்ணாட் அடிகளார் ஆகியோரும் அருட்கன்னியர்களும் இந்தக் குழுவில் இடம்பெற்றனர்.

தாழையடிப் பகுதியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக ஆயர் தெரிவித்தார். (உ-7)

# கற்பிட்டிக் கடலில் 12 அகதிகள் மீட்பு

கொழும்பு, டிசெ. 29

இராமேஸ்வரத்தில் இருந்து பேசாலை நோக்கி 12 ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் டீஸல் இயந்திரம் பொருத்தப்பட்ட — படகு ஒன்று புத்தளம், கற்பிட்டிக் கடலில் இயந்திரக் கோளாறுக்கு உள்ளாகித் தத்தளித்துக் கொண்டிருந்த போது நேற்று அதிகாலை தங்களால் மீட்கப்பட்டதாகக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

படகில் இருந்த அகதிகள் அனைவரும் விசாரணைக்காக கற்பிட்டிப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (உ-7)

# திருமலையில் மீனவர் பலி!

திருகோணமலை கோணேசர் மலைக்கு அப்பாலில் உள்ள கடலில்நேற்றுக்காலை இடம்பெற்றகடற்கொந்தளிப்பில் சிக்கி மீனவர்களின் 5 வள்ளங்கள் கடலில் மூழ்கின. அவற்றில் இருந்த மீனவர்களில் இருவர் பலியாகினர். மீட்கப்பட்ட மற்றவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவர்களில் ஒருவரின்சடலம் மட்டும் மீட்கப்பட்டுள்ளது. (உ-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வியாபாரிகளே!

### மாணவமணிகளே!!

அப்பியாசக் கொப்பி வகைகளையும்
பாடசாலை அனைத்து உபகரணங்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

## கலைமகள் வர்த்தக நிலையம்

286, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. NO 021-2410

(72161)



### வணிகப் பிரமுகர்களே!

மேலும் மேலும் உங்கள் பெயர் விலாசங்களை
**2000 ஆண்டுக்கான கலண்டர்கள்**
மூலம் ஊர்ஜிதம் செய்து கொள்ளுங்கள்.

வகை வகையான
**கலண்டர்கள்** மற்றும் **டயறிகள்**
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு
விசேட கழிவு கொடுக்கப்படும்.

**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 2567

குறிப்பு: சத்திரச்சந்திக்கருகில் (72159)



## COMPUTER POINT

(Training Division)
REGD. No. J/DS/BR/63/97
No.28, St. Patrick's Rd,
Jaffna

(Discover The 20 th Centuary!)

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 09-01-2000, 15-01-2000 — 10.30 A.M. (S.L.T.)

- Beginner's Computer Studies (Programming in Basic Language)
- Advanced Computer Studies
- Diploma in Computer Studies
- Certificate Courses

| | |
|---|---|
| Ms Word | Ms Access |
| Ms Excel | Ms Power Point |
| Ms Outlook | Ms Word Perfect (6.0) |

Lecture s By :- **S. R. LOGENDRA**
(D. C. A., Systems Analyst M. C. S. India)

★ வகுப்பு 10 மாணவர்களுக்கான பிரத்தியேக கணனி வகுப்புகள் அறிமுகப்படுத்த உள்ளோம்.
★ G. C. E. O/L, G. C. E. A/L, பல்கலைக்கழக மாணவரின் நன்மை கருதி விசேட கணனி வகுப்புகள்.
★ அனைத்து வகுப்புகளும் வார நாள்கள் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.
★ மிக விரைவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று தங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(72116) - நிர்வாகி


## கண்ணீர் அஞ்சலி

எமது வலிகாமம் மேற்கு பிரதேச செயலக வட்டு. தெற்கு (J/165) பிரிவின் கிராம உத்தியோகத்தர்

**திரு. சீ. நாகரத்தினம்**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சீனிவாசகம் சின்னத்தங்கம்

அவர்கள் 27—12—1999 அன்று காலமானதையிட்டு கவலையுற்றிருக்கும் அமரரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
பிரதேச செயலக நலன்புரிச் சங்கத் தலைவரும்
உறுப்பினர்களும்.

பிரதேச செயலகம்,
சங்கானை. (சி/10378)

# கருத்தரங்கும் செயலமர்வும்

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் 2000 ஆம் ஆண்டில் தரம் 7, 10 ஆம் வகுப்புக்களில் சமூகக்கல்வியும் வரலாறும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட அறிமுகம், கருத்தரங்கு, செயலமர்வு என்பன இன்று காலை 8. 30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் இன்றும் நாளையும் தரம் 7க்கான புதிய பாடத்திட்ட செயற்பாடுகளும், 31, ஜனவரி 1 ஆகிய இரு தினங்களில் தரம் 10ற்கான புதிய பாடத்திட்ட செயற்பாடுகளும், 2 ஆம் திகதி தரம் 10 இற்கான மேலதிக பாட அறிமுகமும் (புவியியல், வரலாறு, அபிவிருத்திக்கல்வி) இடம்பெறும்.

2000 ஆண்டில் இப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பளர் சி. சிவராஜா தெரிவித்துள்ளார்.

அதேசமயம் வடமராட்சி வலய க. பொ. த. (உயர் தர) வர்த்தக ஆசிரியர்களுக்கான கணக்கியல், பொருளியல், வணிகக்கல்வி ஆகிய பாடங்களின் செயலமர்வு நாளையும், மறுதினமும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தச் செயலமர்வில், மேல்குறிப்பிட்ட பாடங்களுக்குரிய ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா கோரி உள்ளார். (இ-109-118

★ ★ ★

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 2 இல் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான 2 ஆம் கட்டப் பயிலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துவில் நடைபெறவுள்ளது.

2000 ஆம் ஆண்டில் தரம் 2 இல் கற்பிக்கவுள்ள சகல ஆசிரியர்களையும் இந்தப் பயிலமர்வில் கலந்து கொள்ளுமாறு வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-10-133


## SHAMROCK

யா/ ஈச்சமோட்டை

- Gr.4 முதல் O/L வரை **ஆங்கில இலக்கியம், சித்திரம்** உட்பட ஆரம்பமாகியுள்ளது.

- A/L 2002 **கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித** பிரிவுகள் 05-01-2000 3 p.m.

- A/L 99 DAY CLASS 03-01-2000 7a.m.

(சி/10375)



## ராஜா

யாழ்ப்பாணம்
**விஜய் - ஷாலினி**
மற்றும்
பலர் நடித்த

### காதலுக்கு மரியாதை

10.30, 2.30
[சி/10316]



## நாகம்ஸ்

சுன்னாகம்
கார்த்திக்,
பானுப்பிரியா
நடித்த

### கோபுர வாசலிலே

காட்சிகள்: 10.30, 2.30
(புதிய நேரம்)
[72039]



## லிபேட்டி அச்சுவேலி

**சத்தியராஜ், ரோஜா**
நடித்த

### அழகர்சாமி

காட்சிகள்: 10.30 2.30
T. P. 070-212223
070-212678
[72078]


## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், டிசெ. 29

தபால் திணைக்களத்தில் நாற்பது ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வுபெற்ற எஸ். தர்மராஜா அவர்களுக்கான பிரிவுபசார விழா நாளை வியாழன் பிற்பகல் 3மணிக்கு வட்டுக்கோட்டை தபாலகத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை அஞ்சலகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த விழாவுக்கு அஞ்சலதிபர் எம். சண்முகநாதன் தலைமை வகிப்பார்.

ஓய்வுபெற்ற எஸ். தர்மராஜன் இறுதியாக யாழ். மாவட்— அஞ்சல் அத்தியட்சகராக கடமையாற்றினார்.

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் உருத்திரா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் உருத்திரா அவர்கள் 25–12–99 அன்று காலமானார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த வைத்திலிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் வேலக்கைப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை – வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் தங்கலட்சுமியின் அன்புக் கணவரும் சாமினியின் (சுவிஸ்) ஆசை அப்பாவும் பாஸ்கரனின் (சுவிஸ்) அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26 - 12 – 1999 அன்று மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தங்கலட்சுமி**
(மனைவி)

மானிப்பாய். (72176)

## திருமதி சின்னப்பிள்ளை ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியை, செங்குந்தாஇந்துக்கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை ஆறுமுகம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் இராசாத்தி (கொழும்பு), விக்கினேஸ்வரி (பிரதேச செயலகம், கோப்பாய்), இராசேஸவரி (ஈஸ்வரி ஹோமியோபதி மெடிக்கல் கிளினிக், கல்வியங்காடு), காலஞ்சென்ற கேசவன் ஆகியோரின் அருமைத் தாயாரும் செல்வரட்ணத்தின் (சிங்கராசா) சிறியதாயாரும் யோகராஜா (கனடா), தவகுமாரன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராஜா (அதிபர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரம்யா, அகல்யா, ஜெகப்பிரதாபன், அனுசுயா, தனுஜா, சோபியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழகிழமை (30 – 12 –1999) காலை 10 மணிபளவில் (புதிய நேரம் 10.30) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்
சிறீஸ்கந்தராஜா
(மருமகன்)

372, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (72140)

## புவிராஜரட்ணம் திருஞானசம்பந்தன்

(கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம்)

இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட புவிராஜரட்ணம் திருஞானசம்பந்தன் நேற்று (28 — 12 — 99) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புவிராஜரட்ணம், சரஸ்வதி அவர்களின் அன்பு மகனும், முருகேசு கந்தையா, காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும் உஷாந்தினி (சுவிஸ்), கிரிஷாந்தினி (கொழும்பு)' சதீஸ் (உடு/ அ. மி கல்லூரி), துஷாந்தினி (உடு/ மகளிர் கல்லூரி), பிரிஷாந்தினி (உடு/ மகளிர்), ஆகியோரின் அன்புத் தந்தையும், நடேஸ்வரனின் (சுவிஸ்), அன்பு மாமனாரும் யோகேஸ்வரி, விவேகானந்தன் (இலங்கை வங்கி, மானிப்பாய்), கதிர்காமநாதன் (அச்சுவேலி), யோகானந்தன் (சவூதி அரேபியா), சுகுமார் (கொழும்பு), பரமேஸ்வரி (சுவிஸ்), நந்தகுமார் பொறியியலாளர், அமெரிக்கா), மோகன்ராஜ் (பொறியியலாளர், நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்?

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**விமலராணி**
(மனைவி)

யூனியனடி,
இமையாணன்,
உடுப்பிட்டி. (72167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர்
# திரு. சி. தர்மராஜன் அவர்களின்
# ★ சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ் ★

29 – 12 – 1999



## பதவிக்குப் பெருமை

**திரு. சின்னத்தம்பி தர்மராஜன்** அவர்கள் தனது அறுபதாவது அகவையில், ஆத்ம திருப்தியோடும் மகிழ்வோடும்பணியிலிருந்து இளைப்பாறுவாரெனநம்புகின்றேன். இந்த நம்பிக்கைக்குக்காரணம் அன்னார் தமது பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி, தாம் வகித்த பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர் என்பதனாலாகும். அவரால் பதவிகள் பெருமைபெற்றன.

அறுபதாவது அகவை என்பது புதியதொரு சமூக வாழ்விற்கான தொடக்க வயதென்பர்; திரு. சின்னத்தம்பி தர்மராஜன் அவர்களுக்கு என் வாழ்த்துக்கள். ஆயுளும் ஆரோக்கியமும் நூறாண்டுகளைத் தாண்ட இறைவனை வேண்டுகின்றேன்.

**கலாநிதி க. குணராசா**
பதிவாளர்,
யா/பல்கலைக்கழகம்.

## ஆதீன முதல்வர் அருளாசி

இன்று திரு. சின்னத்தம்பி தர்மராஜன் அவர்கள் சேவையில் இருந்து ஒய்வுபெறும் நாளை விழாவாகக் கொண்டாடுவதை அறிந்து மனநிறைவு அடைகின்றோம். திரு. சி. தர்மராஜன் அவர்கள் அடக்கமும் அறிவும் உடையவர். இயல்பாகவே எளிமையும் பழகுவதற்கு இனிமையும் உடைய பண்பானவர். அஞ்சல் திணைக்களத்தின் பணிகளைச் செவ்வனே ஆற்றி அனைவரது நன் மதிப்பையும் பெற்றவர். சமய, சமூக சேவைகளில் தொண்டாற்றி மனித நேயத்துடன் வாழ்பவர். அவர் தொடர்ந்தும் சமூக, சமய சேவைகளில் பணிபுரிந்து பல்லாண்டுகாலம் வாழ ஆசிகூறி வாழ்த்துகின்றோம். திரு. சி. தர்மராஜன் அவர்களின் சேவைகளை இறைவன் ஆசீர்வதிப்பானாக.

வாழ்க வளமுடன்!
'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ**
**சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
குருமகாசந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## துர்க்காதுரந்தரி ஆசி

அன்பும் பண்பும் அறிவுசால் ஆளுமையும் மிக்க யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் உயர்திரு. தர்மராஜன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நாற்பது ஆண்டுகள் அஞ்சல் திணைக்களத்தில் அரிய சேவையாற்றிய இந்த உத்தமருக்கு சேவை நலன் பாராட்டு விழா எடுப்பது மிகவும் பாராட்டுக்குரியது. தன்னலம் கருதாது தகைமை சார்ந்த பணியாற்றி பலரது நன் மதிப்பைப் பெற்றவர் இவர். பெரியவர்களை மதிக்கும் பண்பும் காலமறிந்து கருமமாற்றும் கற்றவர் மேன்மையும் இவரது சேவையில் யாவரும் கண்ட சிறப்புக்களாகும்.

சிறந்த தலைமைப் பண்புகளோடு பணியாற்றிப் பாராட்டுப் பெறும் அத்தியட்சகர் திரு. தர்மராஜன் அவர்கள் நீடு நலமே வாழ துர்க்கையம்மனைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

துர்க்கா துரந்தரி
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## அரசாங்க அதிபர் வாழ்த்து

அஞ்சற் சேவையானது இலங்கையில் மிகவும் தரமுயர்ந்தே காணப்படுகிறது. யுத்தச் சூழ்நிலையினால் சில சமயங்களில் இந்தச் சேவை பாதிக்கப்பட்டாலும் பெரும்பாலான சமயங்களில் தன் தலையாய கடமையை இந்தத் திணைக்களம் என்றுமே செய்வதில் பின் நிற்கவில்லை. இதற்குக் காரணம் தபால் திணைக்களத்தில் சேவை ஆற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் பிற பணியாளர்களின் சிறந்த சேவை மனப்பான்மையே.

யாழ்ப்பாண மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராகப் பணியாற்றி, தனது நாற்பது வருட சேவையிலிருந்தும் இளைப்பாறும் திரு. சின்னத்தம்பி தர்மராஜன் சேவை மனப்பான்மை மிக்க அதிகாரிகளுள் ஒருவராவார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கற்ற திரு. தர்மராஜன் ஒரு கனவானாகத் திகழ்ந்தார். இலங்கையின் சகல பாகங்களிலும் பணியாற்றிய அனுபவம் இவருக்கு நிறைய உண்டு. நெருக்கடி மிகுந்த கால கட்டங்களில் இவர் மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றியதை நாங்கள் என்றும் மறக்க முடியாது. திரு. தர்மராஜன் மனைவி, மக்களுடன் நீடூழி வாழ இறைவன் துணை நிற்க. அவரது சமூகப்பணிகள் தொடர என் வாழ்த்துக்கள்.

**க. சண்முகநாதன்**
யாழ். மாவட்டம். அரசாங்க அதிபர்:

## மேலதிக அரச அதிபர் வாழ்த்து

எனது இனிய நண்பன் சின்னத்தம்பி தர்மராஜன் நாற்பது ஆண்டுகள் அஞ்சல் திணைக்களத்தில் சேவை ஆற்றி ஒய்வுபெறுகிறார். 16 - 03 - 1960 இல் சேவையில் சேர்ந்த தர்மராஜன் மாத்தளை, மரதன்கடவல, உக்குவல்ல, ஹற்றன், பூநகரி, சங்கானை, வயாவிளான், செங்கலடி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என்று சகல இடங்களிலும் ஒழுங்காகப் பணியாற்றி நல்ல அனுபவம் பெற்றவர்.

தனது அனுபவத் திறனால், முதலில் நுண் ஆய்வு பரிசோதகர் பதவி பெற்று சேவையாற்றி, இறுதியில் யாழ். மாவட்டத்தின் அஞ்சல் அத்தியட்சகராக 15 – 9 - 95 முதல் கடமையாற்றி ஒய்வு பெறுகிறார்.

நெட்டுயர்ந்த மனிதனான தர்மராஜனின் இதயமும் உயர்ந்ததுதான். கடமையில் மிகவும் கண்டிப்பானவர். ஆனால் நண்பர்களோடும் தனது சக அலுவலர்களோடும் மிகுந்த நட்புணர்வோடு பழகும் தன்மையுடையவர்.

அவரது ஒய்வுக்காலம் செம்மையுறவும் சமூகத்துக்கு நலன் தரும் விதத்திலும் அமையவேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்வுறுகிறேன்.

**து. வைத்திலிங்கம்**
யாழ்ப்பாணம். மேலதிக அரச அதிபர்

## மனிதருள் மாணிக்கம்

வடகோவையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட பெருமதிப்புக்குரிய திரு. சின்னத்தம்பி தர்மராஜன் அவர்கள் தனது பணியை அஞ்சற் சேவையில் 1960 இல் ஆரம்பித்தார்.

தமது மொழியாற்றலாலும் செயற்றிறனினாலும் யாழ். மாவட்டம் உட்பட வெவ்வேறு மாவட்டங்களிலும் மூன்று தசாப்தங்களை அஞ்சற் சேவைக்காக அர்ப்பணித்தவர். சிறந்த நிர்வாகத்திறமையும், ஆளுமையும் கொண்டதனால் பதவி உயர்வுகளைப் பெற்று அடுத்த ஒரு தசாப்தத்தில் யாழ். மாவட்டத்திலேயே அதிகாரி தரத்தில் பணிபுரிந்தார். அவ்வேளையில் தன் கீழ் பணிபுரிந்த அனைத்துத் தர உத்தியோகத்தர்களையும் தனது அன்பாலும் பண்பாலும் இனிய வார்த்தைகளாலும் அரவணைத்து மனிதருள் மாணிக்கமாகத் திகழ்பவரை இனிதே நீடூழி வாழ்கவென எமதுசங்கச் சகோதரர்கள் சார்பில் வாழ்த்துகிறேன்.

செயலாளர்,
அகில இ. அ. தொ. தொ. சேவையாளர்
சங்கம், யாழ். கிளை.

## யாழ். ஆயர் அருளாசி

அன்பர் திரு. சின்னத்தம்பி தர்மராஜன் அஞ்சல் திணைக்களத்தில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகப் பணியாற்றித் தனது 60 ஆவது அகவையில் ஒய்வுபெறும் இவ்வேளை அவரது கடமையுணர்வையும் கண்ணியமான பணிச்சிறப்பையும் வாழ்த்துவதில் உங்களோடு இணைகின்றேன்.

''தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் உணரப்படும்'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்கத் தம் வாழ்வை அமைத்த திரு. சின்னத்தம்பி தர்மராஜன் பெற்ற பெருவாழ்வை அவரது பணிக்கள் சாதனைகள் எடுத்தியம்பும். பணிக்களத்தில் உயர்ந்தவர் பணியால் மக்மனதில் தனி இடம் உண்டு என்பதை எமது மண்ணின் வரலாறு சொல்லும்.

அஞ்சலகப்பணி ஒய்ந்தாலும் மக்கள் பணிக்கு ஒய்வில்லை. எனவே எல்லாம் வல்ல இறைவன் இவரைக் காத்து வழி நடத்துவாராக. எனது ஆசிகள் நிறைந்த பிரார்த்தனை

**பேரருள் திரு**
**தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர்

## பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அவர்களின் பாராட்டுச் செய்தி

கடந்த இரண்டரை வருட காலம் யாழ்ப்பாண மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. சி. தர்மராஜன் 1999-12-29 தொடக்கம் சேவையிலிருந்து ஒய்வுபெறுவதை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை விடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக அவர் அஞ்சல் திணைக்களத்தில் பல்வேறு பதவிகளைத் திறம்பட வகித்தவர். திணைக்களத்திற்கும் பொதுமக்களுக்கும் அவர் ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியன. அவருடைய அனுபவம் ஆற்றல் என்பவற்றால் திணைக்களம் மிகவும் பயனடைந்தது எனக் கூறின் அது மிகையாகாது.

**அ. க. சிவஞானசுந்தரம்**
பதில் பிரதி அஞ்சலதிபர் நாயகம்
யாழ்ப்பாணம். (வடமாகாணம்)

## சேவைக்கு ஒரு செம்மல்

**சேவைகளிலே** அஞ்சற் சேவை ஓர் உன்னத சேவையாகும். மனித உறவுகளுக்கு இச்சேவை ஒரு பாலமாக அமைகிறது. இத்தகு சிறப்புடைய திணைக்களத்தில் 16–03–60 இல் தன்னையும் ஒரு சேவையாளனாக இணைத்துக்கொண்டு உதவி அஞ்சல் அதிபர் பதவியில் அமர்ந்து கடந்த 40 வருடங்களாக உதவி அஞ்சல் அதிபர், பொறுப்பு அஞ்சல் அதிபர், மாவட்ட நுண்ணாய்வுப் பரிசோதகர், மாகாண நுண்ணாய்வுப் பரிசோதகர், பதில் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர், பதில் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எனப் பல்வேறு உயர் பதவிகளில் தமது முழுநேரத்தையும் சேவை மனப்பாங்குடன் அஞ்சல் திணைக்களத்துக்கும் பொதுமக்களுக்கும் அளித்து ஆற்றிய அளப்பரிய சேவையை திரு. சி. தர்மராஜன் 60 ஆவது வயதில் 28–12–99 இல் பூர்த்தி செய்துள்ளார்.

அவரின் நிர்வாக ஆளுமை, திறமை, துணிச்சல், தன்னலமற்ற சேவை மனப்பான்மை இன்முகம்காட்டும்இனிய சுபாவம், மலைபோல உயர்ந்து நிற்கும் உயர்ந்த பண்புஎன்பன அவரது சிறப்பியல்புகள். கடமையையே கண்ணாகக் கருத்தில் கொண்டு எம்மையும் எமது திணைக்களத்தையும் நெறிப்படுத்தியவர் திரு. தர்மராஜன். பண்புக்கும் பாசத்துக்கும் இலக்கணமாக திகழ்ந்த அவர் சேவைக்கு ஒரு செம்மல்.

இக்கட்டான நிலையிலும் எமது உபதபால் அதிபர்களின் நலன்களில் துணிச்சலுடனும் அக்கறையுடனும் செயற்பட்டவர் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கின்றோம்.

**அகில இலங்கை**
**உபதபால் தொழிற்சங்கம்,**
**யாழ்ப்பாணக்கிளை.**
(சி/10349)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெந்தல கப்பலில் வெங்காயம், புகையிலை ஏற்றுவோர் கவனத்துக்கு

நாளை 30 - 12 - 99 வியாழக்கிழமை சோதனைகள் ஆரம்பமாவதால் மேற்கூறிய பொருள்களை ஏற்றி அனுப்புவோர் உடன்தொடர்பு கொள்ளவும்.

**ஜெசிபா ஏஜென்சி,**
**132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

T. P. 2407 FAX: 2041

(சி/10367)


# இலங்கை வங்கி

## அறிவித்தல்

1999 ஆம் ஆண்டுவருட இறுதிக் கணக்குகளை முடிப்பதற்காக எமது கீழ் வரும் வங்கிக் கிளைகளில் மார்கழி 30 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 9-00 மணி முதல் 11-00 மணி வரை வாடிக்கையாளருக்கான வங்கிச் சேவை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும், 31 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) வாடிக்கையாளருக்கான வங்கிச் சேவை நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மேற்தரக் கிளை
யாழ். இரண்டாம் கிளை
சுன்னாகம் கிளை
சாவகச்சேரிக் கிளை
ஊர்காவற்றுறைக் கிளை
நெல்லிடியக் கிளை
பருத்தித்துறைக் கிளை
காங்கேசன்துறைக் கிளை
மானிப்பாய்க் கிளை
காரைநகர்க் கிளை

**மாவட்ட முகாமையாளர்**
இலங்கை வங்கி

**பிரதம முகாமையாளர்**
யாழ். மேற்தரக் கிளை

(சி–10368)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
**செல்வி ரதி நவரட்ணம்**
அவர்களின் அன்புச் சகோதரனான
**நவரட்ணம் றட்ணசீலன்**

அவர்கள் 23– 12– 99 இல் வன்னியில் அகால மரணமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை, அவரது குடும்பத்துக்குச் சமர்ப்பிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை வேண்டுகின்றோம்.

**AL 2001 கலைப்பிரிவு,**
**வடமராட்சி மாணவிகள்.**

(சி/10371)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவனும் நண்பனுமாகிய
சி. ஹரிகரன் அவர்களுடைய
அன்புத் தந்தையாராகிய
**வி, சிறிபாலகணேசமூர்த்தி**

அவர்களது மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆண்டு 9 மாணவர்கள்**

சதாபொன்ஸ்,
அல்வாய்.

(சி–10362)

# கண்ணீர் அஞ்சலி

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் நீண்ட காலமாக, விலைமதிப்பீட்டுப் பரிசோதகராகக் கடமையாற்றி யாழ். மாவட்ட விலைமதிப்பீட்டு அலுவலகத்திலிருந்து ஓய்வுபெற்றவரான

**கே, தனபாலசிங்கம்**

அவர்கள் 20 – 12 - 99 அன்று கொழும்பில் மரணம் அடைந்ததையிட்டு கவலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். விலைமதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.**

(72158)

# சேவைநலன் பாராட்டு விழா

வலிகாமம் தெற்கு, டிசெ. 29

வலிகாமம் கல்வி வலய நலன்புரி மன்றத்தினரின் ஆதரவில் வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்வும் இடமாற்றம் பெற்ற அலுவலர்களின் சேவை நலன்பாராட்டு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற உள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச்சென்றஅலுவலர்கள் மற்றும் இளைப்பாறிய முதன்மை ஆசிரியை திருமதி நா. தேவராசா ஆகியோரின் சேவைகளைப் பாராட்டியும்—

வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சின் தமிழ் இலக்கிய எழுத்தாளர்களுக்கான பரிசினைப் பெற்றவரும் யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் கல்வி சார் நடவடிக்கைகளின் இணைப்பாளராக பதவி உயர்வு பெற்றவருமான திருமதி கோகிலா மகேந்திரனைப் பாராட்டியும் இந்த விழா நடத்தப்படுகிறது.

நலன்புரி மன்றத் தலைவர் ச. வீரசிங்கம் தலைமையில் விழா இடம்பெறும்.

(க–152)

# விண்ணப்பம் கோரல்

கொழும்புத்துறை, டிசெ.29

வடக்கு — கிழக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் பிரதேச ரீதியாக நடத்தப்பட்டுவரும் ஒரு வருட டிப்ளோமா பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைபட்டோரிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன. இம் மாதம் 31 ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதி ஆகும்.

(க-30)

# இடமாற்றம் ரத்து

வலி. தென்மேற்கு. டிசெ.29

மானிப்பாய் பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவு வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடமாற்ற உத்தரவினை ரத்துச் செய்யுமாறும், மீள்பரிசீலனை செய்து வழங்குமாறும் மானிப்பாய் பிரதேச சபை தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் விடுத்த வேண்டுகோளை அடுத்தே உள்ளூராட்சி ஆணையாளரினால் இடமாற்றம் ரதுதுச் செய்யப்பட்டுள்ளது. (இ - 185)


கணக்கீடு
பிரத்தியேக வகுப்புகள்
**A/L 2000**
DAY CLASS
இரயக்கணக்கீடு
**A/L 2001**
வங்கிக் கணக்கிணக்க – கூற்று
**A/L 2002**
புதிய பிரிவு
ஆரம்பம்: 5-1-2000
By. V. S. T. Kumaran
அறிவொளி
கல்விக்கழகம்
150, [illegible] வீதி,
நல்லூர். [illegible]


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை,

சுழிபுரம்.

# வரவு செலவுத் திட்டச் செய்தி

2000 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான நான், இச் சபைத் தலைவராகப் பதவி ஏற்றபின்பு சமர்ப்பிக்கும் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் ஆகும்.

எமது பிரதேச சபையின் பிரதான வருமானமாகவுள்ள ஆதனவரி கடந்த போர் அனர்த்தங்களால் அறவிட முடியாமல் பல லட்சம் ரூபா நிலுவையாக உள்ளது. இவ்வரியை மக்கள் செலுத்தி ஒத்துழைப்பு நல்கினால் எமது சபையினால் மேலும் திருப்திகரமான சேவைகளைச் செய்யமுடியும். பல வருடங்களின் பின்பு சங்கானை, சுழிபுரம் உப அலுவலகப் பகுதியில் ஆதன வரி மதிப்பீடு மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நூலகங்கள், இலவச ஆயுள்வேத வைத்தியசாலைகள், சுகாதாரம் ஆகிய சேவைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. இச்சேவைகள் செய்வதற்கு சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றுக்கான கேள்விகள் மூலம் கிடைக்கும் வருமானம் ஓரளவு துணை செய்கின்றது. இரு நிரந்தர ஆயுள்வேத வைத்தியசாலைகளான சுழிபுரம், சங்கானை ஆகியன 30 வருடங்களுக்கு மேலாக இயங்கிய போதும் 1996 ஆம் ஆண்டு ஆளணியில் ஒரு வைத்தியசாலைக்குரிய ஆளணியாகக் குறைக்கப்பட்டதால் வைத்திய சேவைகளின் நாள்கள் குறைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இச் சேவைகள் முழுமையாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. வட்டுக்கோட்டை, அராலி ஆகிய கிளை வைத்தியசாலைகளும் கூடிய நாள்கள் சேவை செய்ய ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

குடிதண்ணீர் விநியோகத் திட்டங்களான அராலி வடக்கு, பொன்னாலை என்பன ஜேர்மன் தொழில் நுட்பக் கட்டமைப்பு நிறுவன மூலம் முதலி கோயிலடி ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய மூலமும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களுக்கு எனது நன்றியைச் சபையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலம் இறாத்தலடி, சங்கானை தெற்கு ஆகிய பகுதிகளுக்கு நீர்விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த ஆண்டில் அராலி உப அலுவலகக் கட்டடம், நூலகக் கட்டடம், சுழிபுரம் நூலகக் கட்டடம், சங்கானை கடைத்தொகுதி, சத்தியக்காட்டுச் சந்தை என்பன புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை, வடக்கு—கிழக்கு புனர்வாழ்வு அதிகார சபை ஆகியவற்றின் நிதி மூலமும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வீதிகள், பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கிணறுகள் முதலானவை புனரமைப்பு, திருத்த வேலைகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசினால் வழங்கப்படும் நிதி ஆண்டின் முற்பகுதியில் கிடைக்காது பிற்பகுதியில் கிடைப்பதால் அபிவிருத்தி வேலைகள் அவசரமாகவும் விரைவாகவும் நிறைவேற்ற வேண்டி இருக்கின்றது. இந்நிதி 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் கிடைத்தால் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுத்துச் செல்ல வசதியாக இருக்கும்.

ஆளணி பற்றாக்குறையை நிறைவு செய்து பூரணமான சேவைகள் நிறைவேற்றுவதற்குச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப் பிரதேச சபை மக்கள் ஆதனவரி, வாகனவரி, வியாபார வரி முதலானவற்றைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. கிடைக்கும் வருமானங்களால் எமது பிரதேசத்தின் சேவைகள் திருப்தியாக நிறைவேற்றலாம் என எதிர்பார்க்கிறேன்.

எமது சபையின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றி வரும் எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான திரு. வி. கே. ஜெகன் அவர்களுக்கும் எமது சபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வழங்கிய சேவைகளுக்கும், மக்களின் ஆதரவுக்கும் நன்றி உரித்தாகுக.

எமது சபையைப் பொறுத்தவரையில் உதயமாகின்ற புத்தாண்டில் சபை நிதிகளில் மாத்திரமன்றி ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலம், அரச நிதி மூலம் மக்களின் ஆலோசனையுடன் அபிவிருத்தி மூலம் வளர்ந்து கொண்டிருக்கும் எமது பகுதியை மேலும் அபிவிருத்தியடைய பெரும் பங்காற்றுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லோருக்கும் எனதும் கட்சியினதும் சபையினதும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**வே. மகேந்திரன்**
ஜே. பி.
உப தலைவர்

**ந. திரிலோகநாதன்**
ஜே. பி. யூ. எம்.
தலைவர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

**மா. புலேந்திரன்**
செயலாளர்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம். 1999–12–10

(சி/10374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா
## சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
### யாழ்ப்பாணம்

கல்லூரி 03 - 01 - 2000 ஆம் திகதியன்று பரீட்சையுடன் ஆரம்பமாகும்.

– பதிவாளர்

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (72121)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 — 05 — 1933 | 29 — 11 — 1999 |

### திருமதி சோமசுந்தரம் பாக்கியம்

29 - 11 - 1999 இல் சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (29– 12– 99) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (72066)

## விவசாயக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.29

மாவட்ட விவசாயக்குழு கூட்டம் நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட செயலக மண்டபத்தில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் தீவிர உணவு உற்பத்தித் திட்டம், விவசாயக் காப்புறுதி, கால்நடை அபிவிருத்தி, தென்னை அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படும்.

(ச !)

## உதவிப்பணம் பெறுவோர் கவனத்துக்கு

நெல்லியடி, டிசெ. 29

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தமக்குரிய மாதாந்த பொதுசன உதவிப் பணத்தை பெறத்தவறியவர்களை உடனடியாக விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகயீனம் போன்ற காரணங்களினால் குறித்த காலப் பகுதியில் இக்கொடுப்பனவை பெறத் தவறியவர்கள் அக்காலப் பகுதி விவரங்களை எழுத்து மூலம் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலரின் சிபார்சுடன் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உடன் ஒப்படைக்குமாறும்—

இந்தக் கொடுப்பனவுகள் டிசெம்பர் மாதக் கொடுப்பனவுடன் சேர்த்து வழங்கப் படுமென்றும்—

பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் எம். தருமலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-109)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு பதிப்பக ஊழியர்

### பு. திருஞானசம்பந்தன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவு பதிப்பக ஊழியர்கள்
(யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

(சி-10361)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 — 11 — 1922 | 09 — 01 — 1999 |

### அமரர் சின்னத்தம்பி பத்மநாதன்

(ஆதீனகர்த்தா, நாயன்மார்கட்டு
ஸ்ரீ பிச்சாடனமூர்த்தி ஆலயம்)

பாசமதை எம்மீது பொழிந்து நின்ற ஐயாவே!
நேசமுடன் எம் நெஞ்சில் வாழுகின்ற ஐயாவே!
ஈசன்தாள் பண்ணிசையால் ஏற்றிநின்ற ஐயாவே!
வாசம் புரிக சிவன் நீழலிலே ஐயாவே!

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

333 (117), ஆனந்தன் வடலி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (72038)


# பியர் பிரியர்களே!

## புதிய யுகத்துக்கு புதிய ருசி

யுனைட்டற் புறூவரிஸ் லங்கா லிமிட்டெற் நிறுவனத்தாரின்
சர்வதேச தரம் வாய்ந்த உற்பத்திப் பொருள்கள்

- கிங்ஸ் லாகர் (KINGS LAGER)
- கிங்ஸ் பில்ஸ்னர் (KINGS PILSNER)
- பைசன் எக்ஸ்ரா லாகர் (BISON XXX TRA LAGER)
- கிங்ஸ் எக்ஸ்ரா ஸ்ட்ரோங் ஸ்டவுட் (KINGS EXTRA STRONG STOUT)

சகல மதுபானக் கடைகளிலும் கிடைக்கும்.

ஏக விநியோகத்தர்கள்:

## வாமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2989

(சி-10355)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். புது வருடத்தை முன்னிட்டு குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு: லக்கி மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (72141)

தகரச் சுருக்குக் கேற் நீளம் 12 அடி, அகலம் 8 அடி. மற்றும் சீற் (8 அடி) சீற் பனை மரங்கள் (நீளம் 20 அடி) நிலை, யன்னல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: த. ஆறுமுகம், ''பவளமாளிகை'' கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (72125)

கல்பேட்ஸ் கோழிகள் தொகையாகவும் சில்லறையாகவும் அத்துடன் ஒரு சணல் கடாவும் ஒரு மறி ஆடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே. பத்மநாதன் கொத்துக்கட்டி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (72076)

## இறைச்சிக்கோழி தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரை சந்தையடி, நல்லூர். (72143)

## இறைச்சிக்கோழி

Broiler, சேவல், பேட்டுக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (72142)

## பாடநூல் கையேடு

புன்னாலைக்கட்டுவன், டிசெ. 29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பாட நூல் கையேடுகள் தற்போது வலயக் கல்வி கல்வி அபிவிருத்தி பிரிவினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி கையேடுகள் புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ–133)

## பங்கீட்டுக்கு சிவப்புப்பச்சையரிசி

யாழ்ப்பாணம், டிசெ. 29

தைப் பொங்கலை யொட்டி ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் சிவப்புப்பச்சை அரிசி பங்கீட்டு அட்டைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

மூன்று பேர் கொண்ட குடும்பத்துக்கு 2 கிலோ அரிசியும், 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு 3 கிலோ அரிசியும் வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலரின் அனுமதியுடன் இந்த அரிசியைப் பெற்று மேற்படி பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு விநியோகிக்குமாறு யாழ். செயலக அதிகாரிகள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர். (இ–17)


**B. A. PART-I யாழ்.**

**B. A. பேராதனை**

ஆரம்பமாகிவிட்டன.

**B. A. INAL (யாழ்)**

ஆரம்பம்: 01-01-2000

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(72108)



**A/L 2002**

ஆரம்பம்: 1 - 1 - 2000 காலை 8 மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி – யாழ்.

(72111)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 21 – 03 1919 | 22 12 1997 |

### அமரர் செல்லத்துரை பொன்னுத்துரை

(வீரசிங்கம்)

திதி: 29-12-99

ஆண்டு இரண்டு சென்றாலும் - உங்கள்
நினைவலைகள் என்றும் எங்கள்
நெஞ்சை விட்டு அகலாது!

உங்கள் பிரிவால் துயருறும்
**சர்வேஸ்வரன் குடும்பத்தினர்**
(மருமகன்)

தாவடி வடக்கு,
கொக்குவில்.
(72058)

## தச ஆண்டு நினைவலைகள்



### அமரர் நடராசா சந்திரராசா (போஸ்)

(முன்னாள் உரிமையாளர்,
குகன் ஸ்ரோர்ஸ், தலவாக்கலை)

மண்ணில்: 20-02-1948 விண்ணில்: 19-12-1989

திதி: 29 - 12 - 1999

தந்தை எனும் நாமம் இழந்து
தசாப்தம் ஒன்றும் சென்று விட்டதே
தாராள குணமுடனே பாசமிகு நெஞ்சுடனே
தயவுடனே எமைக் காத்த எம் இதயத் தெய்வமே!
காலனுக்கும் பொறுக்கவில்லையே அவன் குறித்த
காலக் கணக்குப்படி பறித்திட்டான்
எம் வாழ்க்கைப் படகின் துடுப்பாகத் தங்களையே
எண்ணியிருந்தோம் விதியின் விளையாட்டைக்
காலத்தின் கோலத்தில்கூட மறக்க முடியவில்லையே!
காரிருளில் தவிக்கும் எங்களைக் காலமெல்லாம்
காத்திடவே தங்களையே துதிக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்:

உங்கள் அன்பு மனைவி:- திருமதி சு. சந்திரராசா
பாசமிகு பிள்ளைகள்:- தினேஷன், நிஷாந்த், சிவா அனுஜா.

பலாலி வீதி,
கோண்டாவில்.
(72133)

## வட. புன்னாலைக்கட்டுவனுக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கும்

புன்னாலைக்கட்டுவன், டிசெ. 29

வடக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்கம்பங்கள் நிறுவப்பட்டு மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

இப்பகுதி மக்கள் பல தடவைகள் சுன்னாகம் மின்சார சபையைக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே இந்த வேலைகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. (இ–133)


## படக் கலண்டர்கள்

'கொம்பிளிமென்ட்' அடித்துக் கொடுக்கக் கூடிய **'சீனறி', சினிமா, பக்திப் படங்களுடன்** கலண்டர்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

உங்கள் தெரிவுக்கு

**பட்டாபி படமாடம்**

64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10357)



## புத்தாயிரம் ஆண்டில்

உங்கள் இல்லங்களில்

**ஓர் அஷ்டலக்ஷ்மி**

முழுமை - முதன்மை - புதுமை
அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்
அன்றாட கிரக நிலைப் படம் புது அம்சம்
கலண்டருடன் திருக்குறள் இலவசம்.

நாடெங்கும் ஒரே விலை ரூபா 120.

★ 2000 ஆம் ஆண்டுக்கான 12 இராசிகளையும் உள்ளடக்கிய இராசிப்பலன் புத்தகம் விலை ரூபா 40.
ஆசிரியர்: இந்திய சோதிடப் பேராசிரியர்
**என். சிவசுப்பிரமணியம் - மதுரை**

★ 2000ஆம் ஆண்டு வியாழ மாற்றப்பலன் 12இராசிகளையும் உள்ளடக்கியது விலை ரூபா 40.
ஆசிரியர்: **ஏ. என். ராஜாமணி - தமிழ்நாடு**
பஞ்சாங்க மாதக் கலண்டர் ரூபா 60.

விவரங்களுக்கு:

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**

இல. 41, கண்டி வீதி, கைதடி,

(72145)


## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: சங்கரத்தை | மறைவு: ஜேர்மனி |
|---|---|
| 1960 – 05 – 02 | 1999 – 11 – 27 |

### திருநாமம கணேசலிங்கம்

மூத்தவனே கணேசலிங்கா! உமக்கு
நாம் போட்ட முதலீடு மனித நேயம் ஒன்றே
உமது சகல நலன்களையும் தேடி
பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர்
என்போரை முன்னேற்றிய
உம்மைப் போல் ஒரு பிள்ளையைப் பெற
நாம் என்ன தவம் செய்தோம்?
உறவுகளைக் கண்டு களிக்க எண்ணிய உமக்கு
காலன் சதி செய்து விட்டான் இறைவனே!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

எமது மகன் காலமான செய்தி அறிந்து நேரிலும் கடிதமூலமாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (29-12-99) நண்பகல் 12-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது நினைவால் கலங்கும்
**பெற்றோர், உடன்பிறப்புக்கள், உறவினர்கள்.**

பாடசாலை வீதி,
சங்கரத்தை.
(72113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விமானக் கடத்தல்

இந்தியவிமானக் கடத்தல் நாடகம் ஆறாவது நாளை இன்று அடைந்துள்ளது.

காலக்கெடுக்கள் பல கழிந்த நிலையில். 150 க்கு மேற்பட்ட பயணிகள் இன்னும் விமானத்துக்குள் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிடில் பயணிகளுடன் விமானத்தை வெடிவைத்துத்தகர்க்கப்போவதாகதம்மை காஷ்மீர் தீவிரவாதிகள் என்று கூறிக்கொள்ளும் கடத்தல் காரர்கள் அச்சுறுத்தி வருகின்றனர்.

கடத்தற்காரர்கள் தமது கோரிக்கையைக் கைவிடாத நிலையிலும் இந்திய அரசு கடத்தல்காரர்களுக்கு விட்டுக் கொடுக்காத நிலையிலும் 150 க்கு மேற்பட்ட அப்பாவி மனித உயிர்கள் பலியாகும் ஆபத்து உருவாகிவருகிறது. சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு பயணிகள் விடுதலைக்கு வழிவகுக்க வேண்டும்.

இந்த விமானக் கடத்தல் அரசியலுடன் சம்பந்தப்பட்டிருப்பதும் விமானம் இந்தியாவின் பகைநாடான ஆப்கானிஸ்தானில் தரை இறங்கியிருப்பதுமே இந்தப் பிரச்சினை உபகண்டத்தில் நெருக்கடியாக உருவெடுக்கக் காரணம் ஆகும். இந்தியா இதனை பெரியவிவகாரமாகக் கருதிச் செயற்பட்டு வருகிறது. பிரதமர் வாஜ்பாயின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் கூட ரத்துச் செய்யப் பட்டுள்ளன.

தற்பொழுது இந்தியாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் மௌலானா அஷர் மசூதி உட்பட மூன்று காஷ்மீர் தீவிரவாதிகளை விடுதலை செய்யும் படி கடத்தல்காரர்கள் கோரி வருகின்றனர். கடத்தல்காரர்கள் பாகிஸ்தான் ஆதரவாளர்கள் என்பது இதில் இருந்து நன்கு தெரியவருகிறது.

உபகண்டத்தில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் பொறுத்த மட்டில் எந்த ஒரு சிறு சம்பவமும் பெரும் எரிமலையாக வெடிக்கக் கூடியவை, இரு நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் இருப்பதால் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான எந்த ஒரு பிரச்சினையும் சர்வதேச கவனத்தை ஈர்க்கத் தவறுவதில்லை.

கடத்தப்பட்ட விமானம் ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டிருப்பதால் கடத்தலுடன் ஆப்கானிஸ்தானும் பாகிஸ்தானும் மறைமுகமாகச் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று இந்தியா கருதுகிறது.

இதனால்தான் கார்கில் பிரச்சினையைப் போன்று இந்த விமானக் கடததல் பிரச்சினையிலும் இந்தியா கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. ஆப்கானிஸ்தானில் 90 சதவீதமான பகுதிகள் தலிபானின் கட்டுப்பாட்டில் இருப்பதும் வெளிநாடுகள் பல ஆப்கானிஸ்தானுடன் ராஜீய உறவு வைத்துக் கொள்ளாததும் இந்தியா இந்த விவகாரத்தில் மூன்றாவது தரப்பின் உதவியைப் பெறுவதில் தடங்கல் இருந்து வருகிறது.

எனவே, ஐ. நா. வின் உதவியை முழு அளவில் பெற்று இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அப்பாவிப் பயணிகளின் விடுதலைக்கு ஆவன செய்ய இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே சமயம் இப்படியான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதை பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் நிறுத்த வேண்டும்.

# டாக்டர்கள் பற்றாக்குறையால் வெளிநோயாளர் பிரிவு பாதிப்பு

## 12பேர் இருந்த இடத்தில் மூன்று அல்லது நால்வர் கடமையில்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நிகழும் டாக்டர்கள் பற்றாக்குறையினால் நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

பிரதானமாக வெளிநோயாளர் பகுதி, டாக்டர்கள் பற்றாக்குறையினால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் 12க்கும் மேற்பட்ட டாக்டர்கள் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை அளித்து வந்தனர். தற்போது மூன்று, நான்கு டாக்டர்களே வெளிநோயாளர் பகுதியில் கடமையாற்றும் நிலை இருந்து வருவதனால் நோயாளர்களை சரிவர கவனிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதனால் வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறும் நோயாளர்களை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தினமும் சராசரி ஆயிரத்து 500 நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர். ஆனால் தற்போது டாக்டர்கள் பற்றாக்குறையினால் பல நோயாளர்கள் சிகிச்சை பெறாமலே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினமும் சுமார் 300க்கும் மேற்பட்ட நோயாளர்கள் திரும்பிச் சென்றதாக வெளிநோயாளர் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கஷ்ட நிலையைக் கருத்தில் கொண்டு தமது பகுதியில் உள்ள மாவட்ட, கிராமிய வைத்திய சாலைகளில் சாதாரண நோய்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு நோயாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

போதிய டாக்டர்கள் நியமிக்கப்படும் பட்சத்தில் இது நிவர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## உயிரிழந்த புலிகளின் விவரம்

வவுனியா, டிசெ. 29

'ஓயாத அலைகள் — 3' நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்த நான்கு பேரின் பெயர் விவரங்களை நேற்றுக் காலை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. பெயர் விவரம் வருமாறு:-

★ காணகன் (குலசிங்கம் குல அமிர்தராஜ் — யாழ்ப்பாணம்)

★ சபேஸ்காந்தன் (கடாச்சரம் உதயகுமார் —மட்டக்களப்பு)

★ மாணிக்கம் (சின்னத்தம்பி செல்வராசா— மட்டக்களப்பு)

★ மணியரசி (வடிவேல் பவானி—மட்டக்களப்பு)

அதேசமயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இம் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத விபத்துக் காரணமாக தமது தரப்பில் அகப்பருதி (இராசேந்திரம் ரவிச்சந்திரன் —கிளிநொச்சி) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (இ-க-9-6-4)

## சிமெந்து அணை உடைப்பால் போக்குவரத்துபாதிப்புறும் அபாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

வண்ணார் பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் உள்ள வாய்க்கால் ஓரமாகக் கட்டப்பட்ட சிமெந்து அணை சுமார் 15 அடி நீளத்துக்கு உடைந்து வாய்க்காலுக்குள் வீழ்ந்துள்ளது.

பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் ஒன்றை ஒன்று கடக்கும் போது மோதுண்டதாலேயே அணை உடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மழை காலமாதலால் பாதையோர மண் மழைநீரில் கரைந்து வாய்க்காலுக்குள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தப் பாதையில் போக்குவரத்துத்தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும்—

சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பவற்றில் செல்வோரும் பாதசாரிகளும் இதனால் விபத்தில் சிக்க நேரிடுகின்றது என்றும் — விசனம் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ரூ. 6கோடி செலவில் நகரவீதிகள் சந்தைக் கட்டடங்கள் திருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

புத்தாயிரமாம் ஆண்டில் யாழ். நகர வீதிகள், நவீன சந்தைக் கட்டடத் தொகுதிகள் என்பவற்றை 6 கோடி ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கான திட்டமொன்றை யாழ். மாநகர சபை மேற்கொண்டுள்ளது,

இரண்டாயிரமாம் ஆண்டில் யாழ். நகர அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் அவசரமாகச் செய்ய வேண்டிய வேலைகளின் பட்டியல் ஒன்றை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து தமக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் —

கடந்த வாரம் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய மேற்படி திட்டம் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் —

யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் விமானக் குண்டு வீச்சுக்கள் மூலம் அழிக்கப்பட்ட யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதியை மீள நிறுவுவதற்கும் நகர வீதிகளை செப்பனிடுவதற்குமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் —

இதில் நகர வீதிகள், கால்வாய்கள் என்பவற்றைச் செப்பனிட 2 கோடி 50 லட்சம் ரூபாவும் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியை மீள அமைக்க 3 கோடி 50 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யும்படி தாம் ஜனாதிபதி செயலகத்தைக் கோரியுள்ளதாகவும் — ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-9-10)

## ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பதிகாரி

யாழ்ப்பாணம், டிசெ. 29

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரியாக எஸ். ஸ்ரீதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடமையாற்றிய இவர் கடந்த வாரம் வவுனியாவுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இன்று 29 ஆம் திகதி வவுனியா அலுவலகத்தில் இவர் தனதுகடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரியின் கடமைகளை தற்பொழுது சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா கவனித்துவருகின்றார். (இ-5-9-10)

## யாழ். வலயத்தில் இருந்து தீவுப்பகுதிக்கு இடமாற்றம் பெறும் 22 ஆசிரியர்களின் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் 22 ஆசிரியர்கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் தீவகக் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றம்பெற்றுள்ள ஆசிரியர்களின் பெயர் விவரமும் அவர்கள் இடமாற்றம் பெற்றுள்ள பாடசாலைகளின் விவரமும் வருமாறு:-

செல்வி எஸ். தேவராசா, செல்வி எஸ். மாலினி, எஸ். பத்மராஜா, செல்வி ரி.கார்த்திகேயன் ஆகியோர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும்—

செல்வி ஜெ. ஐயாத்துரை, என். சுந்தரமூர்த்தி, செல்வி எம் இரட்ணம், ஆர். புஸ்பதீஸ்வரன் ஆகியோர் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் —

செல்வி என். செல்வநாயகம், கே. யோகேந்திரன், திருமதி பி. மரியகுணசீலி ஆகியோர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்துக்கும்—

செல்வி எஸ். நடேசு, செல்வி கே. துரைராசா, செல்வி ஜி. சற்குணசிங்கம் ஆகியோர் யாழ்ற்றன் கல்லூரிக்கும் —

எம். விக்கினேஸ்வரன், எஸ். பிறான்சிஸ்சேவியர் ஆகியோர் புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்துக்கும் —

செல்வி எம். வடிவேல், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்துக்கும், செல்வி ஜெசிந்தாயேசுராஜன், செல்வி ரி. தயாநிதி ஆகியோர் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கும் —

எஸ். நடேசகாந்தன் புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கும் ஆர். இரவீந்திரன் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்துக்கும், எஸ். சரவணபவானந்தன் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-7)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொழும்புத்துறை, டிசெ. 29

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பயிற்சிநெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

மகளிர் ஊக்குவிப்பாளரை சிறுமுயற்சியிலும் சுயதொழில் வாய்ப்பிலும் ஆற்றல் பெறச் செய்யும் இந்தப் பயிற்சிநெறி 14 நாள்கள் நடைபெற்றது. (இ-10-30)

## நாளை

**மார்கழி 15**

**வியாழக்கிழமை**

திதி: அட்டமி

பிற்பகல் 1.19 வரை

நட்சத்திரம்: அத்தம்

மாலை 7. 10 வரை

சுபநேரம்: 7.59— 9.29

ராகுகாலம்: 1.59— 3.29

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஆடு, கோழிகள் திருட்டு

வலி.தென்மேற்கு, டிசெ. 29

நவாலி வடக்கு - புலவர் வீதியில் நேற்று முன்தினமிரவு நாலாயிரம் ரூபா பெறுமதியான மறி ஆடு திருடப்பட்டுள்ளது.

அதேசமயம் நவாலி தேத்தா மரத்தடிப் பகுதியில் 15 க்கும் மேற்பட்ட கோழிகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-185)

## தராசுகளுக்கு முத்திரையிடும் பணி

வலி, தென்மேற்கு, டிசெ. 29

வலி. தென்மேற்கு-மானிப்பாய் பிரதேச சபைஎல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகளின் தராசுகளுக்கு முத்திரையிடப்பட்டு வருகின்றது.

மேற்படி கடைகளின் தராசுகளுக்கு முத்திரையிடும் பணி கடந்த இரு நாள்களாக பிரதேச சபை வளவினுள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-185)

## இலங்கை வங்கி வாடிக்கையாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 29

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விசேட வங்கி விடுமுறையை முன்னிட்டு இலங்கை வங்கிக் கிளைகளின் கருமபீடங்கள் யாவும் அன்று வாடிக்கையாளர்களுக்கு மூடப்பட்டிருக்கும்.

அத்துடன் நாளை வியாழக்கிழமை கருமபீடங்கள் யாவும் காலை 9 மணி முதல் 11மணி வரை மட்டுமே திறந்திருக்கும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (க-4)

### உதயவாக்கு

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வளர்ந்து விடு அது இலாபகரமானது. முப்பதிலிருந்து அறுபதுவரைதான் உண்மையில் நீ வாழ்க்கையை முழுவதும் அனுபவிக்கும் காலம்.

-ஹெர்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசியாவில்
# மதக்கலவரங்களில்சிக்கி 40பேர்வரை உயிரிழப்பு

ஜகார்த்தா, டிசெ. 29

இந்தோனேசியாவின் மாலுக் மாகாணத்தில் அம்பான் தீவில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தொடர்ந்து இடம்பெற்று வரும்மோதல்களால்இதுவரை 40க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிறன்று வீதி விபத்து ஒன்றில் இஸ்லாமியச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதை அடுத்து இந்த மோதல்கள் ஆரம்பமாகின.

இந்தப் பிரதேசத்தில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தொடர்ந்து முறுகல் நிலை உள்ளது என்றும் —

இந்தப் பிரச்சினை ஏதாவது ஒரு சிறிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அடிக்கடி பூதாகாரமாக வெளிப்படுகின்றது என்றும்— பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய மோதல்களில் தேவாலயம் ஒன்றும் பள்ளிவாசல் ஒன்றும் பல கடைகளும் வன்முறையாளர்களால் மிக மோசமாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

கலவரத்தை அடக்குவதற்காக அப்பகுதிக்கு மேலும் சுமார் 500படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

(இ-6-9)

## பாகிஸ்தானில்
# மரணச் சடங்கில் துப்பாக்கிச் சூடு 14 பேர் உயிரிழப்பு; பலர் காயம்

வடமேற்கு பாகிஸ்தானின் சிக்கந்தர்பூத் என்ற இடத்தில் மரணச் சடங்கு இடம் பெற்றுக் கொண்டிருந்த வீடு ஒன்றில் ஆயுதபாணிகள் சிலர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

இரண்டு மதப் பிரிவுகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகள் காரணமாக ஒரு மதப் பிரிவுத் தீவிரவாதிகள் மற்றைய மதப் பிரிவினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மதப் பிரிவு ஒன்றின் தலைவரும் கொல்லப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தப்பிச் சென்று விட்டனர். அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியினை பொலீஸார் முடுக்கி விட்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. கடைகள், சந்தைகள் என்பன மூடப்பட்டன. அந்த இடத்தில் நூற்றுக்கணக்கானோர் கூடி இருந்தனர். (இ-6-9)

# ஐரோப்பாவில் வீசிய புயலால் 60க்கு மேற்பட்டோர் உயிரிழப்பு

லண்டன், டிசெ. 29

ஐரோப்பாவின் வட பகுதியில் வீசிய கடும் புயலினால் குறைந்தது 63 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை.

மணிக்கு 113 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்தப் புயலால் பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. பெரும் உடைமைச்சேதங்கள் ஏற்பட்டன.

இந்தப் புயலினால் பிரான்ஸில் 30 பேரும் ஜேர்மனியில் 15பேரும் சுவிஸில் 11பேரும், பிரிட்டனில் 4 பேரும், பெல்ஜியத்தில் 2 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4-6)

## விமானக் கடத்தல் நாடகம்
# பணயக் கைதிகளை மீட்பது பற்றிய பேச்சு தொடர்கிறது

புதுடில்லி, டிசெ. 29

கடத்தப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 160 பயணிகளையும் மீட்பது தொடர்பாக இந்திய அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் விசேட விமானம் மூலம் கண்டகார் சென்றடைந்த 7 பேர் கொண்ட இந்தியஅதிகாரிகள் குழு அன்றிரவே தீவிரவாதிகளுடன் வயர்லெஸ் கருவி மூலம் தொடர்பு கொண்டு பேசியது. இதனை அடுத்து தீவிரவாதிகளில் ஒருவர் விமானத்தை விட்டு வெளியேறி வந்து இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பேச்சுக்கள் தொடர்பான விவரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் — பணயக் கைதிகளை மீட்கும் விடயத்தில் இந்திய அரசாங்கம் மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருவதாக பணயக் கைதிகளாக உள்ளவர்களின் உறவினர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனால் பயணிகளை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் — தீவிரவாதிகள் விமானத்தில் உள்ள பயணிகளுக்கு தீங்கு ஏற்படுத்த முயற்சி செய்தால் தலிபான் படையினர் அதிரடியாக விமானத்தில் உள்ளே புகுந்து தீவிரவாதிகளைக் கைது செய்வார்கள் என்று ஆப்கானிஸ்தான் அறிவித்துள்ளது.

விமானத்தில் ஏற்பட்டிருந்த தொழில்நுட்பக் கோளாறைச் சரி செய்வதற்கு இந்திய அதிகாரிகளை தீவிரவாதிகள் அனுமதித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.



வெள்ளியன்று கடத்தப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் அழுது புலம்புவதைப் படத்தில் காணலாம்.

# தீவிரவாதத்தை வளர்ப்பதில் பின்லேடனுக்கு முக்கிய பங்கு
## அமெரிக்கா தெரிவிப்பு

இந்தியாவின் காஷ்மீரில் தீவிரவாதத்தை வளர்ப்பதில் சவூதி அரேபிய கோடீஸ்வரரும் அமெரிக்காவினால் தேடப்பட்டு வருபவருமான ஒஸாமா பின்லேடனுக்கு முக்கிய பங்கு உள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உலகெங்கும் தீவிரவாதத்தை வளர்ப்பதில் பின்லேடன் முக்கிய பங்கு ஆற்றி வருகிறார். காஷ்மீர், மத்திய ஆசியா, காகசஸ், செச்சினியா, தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளில் தீவிரவாதத்தை வளர்ப்பதில் அவருக்கு முக்கிய பங்குண்டு என்று அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கார்ல் இன்ரர் பேர்த் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஒஸாமா பின்லேடனை கைது செய்து நீதி விசாரணையின் முன்னால் அமெரிக்கா நிறுத்தியே தீரும். சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் இதற்காக நாம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் அரசு பின்லேடனுக்கு பாதுகாப்பு அளிப்பது தவறு. சர்வதேச சமுதாயத்தின் கவலையை கருத்தில் கொண்டு பின்லேடனை தலிபான் அமெரிக்காவிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் ஆப்கானிஸ்தான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டி வரும் என்று அவர் மேலும் சொன்னார். (6-4)


# கண்ணீர் அஞ்சலி

3 ஆம் வருட பொதுக்கலை மாணவன்

**மெலீசியன் ரட்ணகுமார் அவர்களின் அன்புத் தாயாரின்**

மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**3 ஆம் வருட மாணவர்கள்**

கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம். (72166)


# ஐவரி கோஸ்டில் தேசிய அரசு; அடுத்த வாரம் அமைக்கப்படும்

அபிஜான், டிசெ. 29

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டில் இராணுவப் புரட்சிக்குப் பின்னர் சிவிலியன்களைக் கொண்ட தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட உள்ளதாக இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் ரொபர்ட் ஜி, அறிவித்துள்ளார்.

புதிய அரசுக்கான தகுந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அறிவிக்குமாறு அவர் நாட்டில் உள்ள சகல சிவில் அரசியல்கட்சிகளினதும் தலைவர்களிடம் கோரி உள்ளார். இந்தப் புதிய அரசு அடுத்த வாரம் அமைக்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்பு, உள்துறை மற்றும் பொலீஸ்துறை ஆகியவற்றை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் என்றும் —

புதிய அரசின் ஏனைய துறைகள் சிவில் அரசியல் கட்சித்தலைவர்களுடன் இணைந்து அமைக்கப்படும் என்றும்—

அவர் மேலும் சொன்னார்.

கடந்த வெள்ளியன்று ஐவரி கோஸ்ட் அதிபர் பெவியின் அரசை திடீர் இராணுவப் புரட்சி மூலம் கவிழ்த்துவிட்டு இராணுவத் தளபதி ஜெனரல் ரொபர்ட் ஜி. ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதை அடுத்து தலை செய்துள்ளார்.

இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து அதிபர் பெவி பிரான்ஸ் நாட்டு தூதரகத்தின் உதவியுடன்



ஐவரி கோஸ்டில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய ஜெனரல் ரொபேர்ட் ஜி (மத்தி). தலைநகர் அபிஜானில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் படையினருடன் உரையாடிக் கொண்டிருக்கின்றார்.

முன்னாள் அதிபரால் சிறை வைக்கப்பட்டிருந்த குடியரசுத்தலைவர் மற்றும் முன்னாள் பிரதமர் [illegible] கொகரா உட்பட பலரை ஜெனரல் ரொபர்ட் ஜி. விடு

நாட்டை விட்டு வெளியேறி உள்ளார். அவர் நைஜீரிய அதிபர் ஒபசாஞ்சோவுடன் [illegible] பேச்சு நடத்தி [illegible] தெரிவிக்கப்பட்டது. (இ-6-9)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

# சமயாசமய ஊழியர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோருதல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து சமயாசமய காவலாளி, வீதி சுகாதாரத்தொழிலாளி ஆகிய பதவிகளுக்கு2000-1-10 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வேலை செய்யும் நாள்களுக்கு சம்பளம் வழங்கப்படும். தகைமை,ஏனைய விவரங்களை தலைமையலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் ஒட்டப்பட்ட அறிவித்தல்களில் பார்வையிடலாம். தலைமையலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

ந. திரிலோகநாதன்,
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்.
1999 - 12 - 28. (சி/10373)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

1999 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் வர்த்தகப் பிரிவில்

**நான்கு பாடங்களிலும் A சித்தி பெற்ற**

எமது நண்பர்களின் புதல்வர்களான

**இராஜநாயகம் குமணன்**
(யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி) - நாவற்குழி கிழக்கு தச்சந்தோப்பு

**கிருஷ்ணன் சதீஸன்**
(சாவகச்சேரி இந்துக் கல்லூரி) - மட்டுவில் வடக்கு சாவகச்சேரி.

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**- கைதடி நண்பர்கள் வட்டம்**

(72163)

## விசேட கலந்துரையாடல்

இடம்:- டி. எம். ஐ. கல்வி நிலையம்
காலம்:- 30–12–99 வியாழக்கிழமை
நேரம்:- காலை 10.00 மணிக்கு

அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தவறாது சமுகம் தரவும்.

நன்றி

**தலைவர்**
**தொண்டர் ஆசிரியர் சங்கம்**
யாழ்ப்பாணம்

(72172)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிராசா சிவஅருட்சோதி

(கொம்பியூற்றர் சோதிடர் – அல்வாய்)

அல்வாய் மாலுசந்தியைச் சேர்ந்த தம்பிராசா சிவ அருட்சோதி (கொம்பியூற்றர் சோதிடர்) நேற்று (28-12-99) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா – சரஸ்வதி ஆகியோரின் அருமைப் புதல்வன் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு புலோலி வடக்கு தாமர் ஒழுங்கையில் உள்ள அன்னாரது பெரிய தகப்பன் இராசையா பத்தரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திரு. திருமதி தம்பிராசா- சரஸ்வதி**
(பெற்றோர்)

தாமர் ஒழுங்கை,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.

(சி/10382)

### செல்வி இராசசிங்கம் இராசலட்சுமி

செல்வி இராசசிங்கம் இராசலட்சுமி 27-12-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசசிங்கம் (ரயில்நிலைய அதிபர்) - பராசக்தி தம்பதியினரின் ஏக புத்திரியும், சண்முகஜோதி (ஜேர்மனி). நரேந்திரா (ஆசிரியர், உரும்பிராய் இந்துக் கல்லூரி), சுந்தரராஜன் (கணக்காளர், சாம்பியா), ரவீந்திரன், ஸ்கந்தராசா (புள்ளி விவர அலுவலர், செயலகம், வவுனியா), காலஞ்சென்ற சந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா (ஆசிரியை —இராமநாதன் கல்லூரி), திருமதி கல்பனா சுந்தரராஜன் (சம்பியா) ஆகியோரின் மைத்துனியும் உசேனி, சிவப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-12-99 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**இ. நரேந்திரா**
(சகோதரன்)

'' சக்திவாசா''
தாவடி வடக்கு.
கொக்குவில்.

(சி/10381)

## ஒளிவிழா

வலிகாமம் தெற்கு, டிசெ. 29

வலிகாமம் கல்விவலய நலன்புரி மன்றத்தின் ஆதரவில் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு ஒளிவிழா இடம் பெறவுள்ளது.

யூனியன் கல்லூரி மண்டபத்தில் நலன்புரி மன்றத்தின் தலைவர் ச. வீரசிங்கம் தலைமையில் ஒளிவிழா நடைபெறும். (இ-க-152)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கை மின்சாரசபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளகிறிஸ்துபிறப்புவிழா நாளை வியாழக்கிழமை மாலை மூன்று மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அதன் பணிமனையில் நடைபெறும். (இ-க)

★ ★ ★

யாழ். வலயக்கல்வி ஊழியர் நலன்புரிக் கழகம் நடத்தும் ஒளிவிழா நிகழ்வு இன்று புதன் காலை 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் தலைவர் இ. நாகராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அவர்களும் கௌரவ விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் ஒளிவிழா சிறப்பு நிகழ்ச்சிகளும் நற்செய்தி வாசிப்பு மற்றும் கிறிஸ்மஸ் கீதங்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன. (இ-10-9)

★ ★ ★

இளவாலை அப்போஸ்தலர் சபையின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு சபைக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளன. (உ-7-48)

★ ★ ★

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்ச்சிகள் இன்று சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது. (உ-7)

## உரும்பிராயில் இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ 29

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய் தெற்கு செல்வபுரத்தைச் சேர்ந்த செல்வரெட்ணம் விஜயகுமார் (வயது 20), சீவரெட்ணம் சிவரூபன் (வயது 23) ஆகிய இருவருமே நேற்று முன்தினம் ஊரெழு முகாம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இருவரது கைது தொடர்பாகவும் படையினரால் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9-5)

## தனங்களப்புப் பகுதியில் வயோதிபரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 29

தனங்களப்பு பகுதியைச் சேர்ந்த சடையர் பொன்னையா (வயது 75) என்ற வயோதிபரை கடந்த 12 ஆம் திகதி முதல் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனங்களப்பு பகுதியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகோதர உத்தியோகத்தரான

**திரு. வாதவூரர் கலாதரன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

### நமசிவாயம் வாதவூரர்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கருத்திட்ட முகாமையாளரும்
சக உத்தியோகத்தர்களும்
விசேட அடையாள அட்டைப் பிரிவு
ஆலோசகரும் அங்கத்தவர்களும்;
**யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியமும்**
**யாழ்.மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும்.**

76, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(72175)

## மரண அறிவித்தல்

### பொன்னையா ஆறுமுகம்

(காரைநகர்)

(உரிமையாளர், ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ், 20, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.)

காரைநகர் பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் 15/1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஆறுமுகம் அவர்கள் நேற்று (28 - 12 - 99) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் சுந்தரம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் சுப்பிரமணியம், ஏனாதிநாதன், கனகசபாபதி, சோதியாம்பாள் ஆகியோரின் மைத்துனரும் நல்லைநாதன் (பொறியியலாளர், அமெரிக்கா), உமாதேவி (கொழும்பு), சறோஜினிதேவி (கனடா), றஞ்சனாதேவி (ஆசிரியை, யா / கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை), கோடீஸ்வரன் (பொறியியலாளர், கனடா), கோபாலகிருஷ்ணன் (ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்), அருள்ஜோதி (மாணவன், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரநாயகி (அமெரிக்கா), கிருஷ்ணமூர்த்தி (நில அளவையாளர், கொழும்பு), வேலாயுதபிள்ளை (பொறியியலாளர், கனடா), பேரின்பநாதன் (அருள்ஸ் பான்சி, யாழ்ப்பாணம்), பாலசெந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் துளசி, அருண், ஜனகன், ஜனார்த்தன், நிஷாந்தன், ஜனனி பிரசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (30 - 12 - 99) நாளை வியாழக்கிழமை மு. ப. 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

15/1, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(72174)


**எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வளமாக அமைய வாழ்த்துகின்றோம்!**

**பாடசாலை மாணவர்களே! புத்தக வியாபாரிகளே!**

## அப்பியாசப் புத்தக விற்பனவு விளம்பரம்

இலங்கை முழுவதும் அதிகம் விற்பனையாகும் தரமான இறக்குமதி செய்யப்பட்ட தடித்த [56 gsm] காகிதாதிகளில் தயாரிக்கப்பட்ட **பரகத் அப்பியாசப் புத்தகங்கள்** மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவோ சில்லறையாகவோ பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

**வுட்சன்ஸ்** (பிரபல தளபாட விற்பனையாளர்)

**631, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்**

தொலைபேசி இல: 2430

WOOD SONS 631, K. K. S. ROAD, JAFFNA.

(72160)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோ CD
வெளியீடு!
சாய்குமார் நடித்த
A.K. 47
(நேரடி CD பிரதி)
விஷ்ணு வீடியோ
K. K. S. Road,
கோண்டாவில்.
(72177)

விற்பனைக்கு
Pioneer 5 அடுக்கு
டெக்செற்
BOX உடன்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
A. ஜெகா
பாடசாலை வீதி,
தாவடி
(72173)

உடன் தேவை
எமது நிறுவனத்துக்கு 'அயன்'
செய்யக்கூடியவர் தேவை. நல்ல சம்பளம்
வழங்கப்படும்.
சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்
இல.73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 2671 (சி/10380)

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
[ A/L 2002 ]
கணிதபிரிவு
ஆரம்பம் - 07-01-2000
(வெள்ளி 3 மணி)
"வழமையான ஆசிரியர் குழு"
(72119)

விசேட அறிவித்தல்
யாழ். நகரில் தனித்துவமாக இயங்கி வரும் பொருளியல் கல்லூரி யாழ். நகரில் இருந்து தன் சேவையை விரிவு படுத்தும் வகையில் இணுவிலில் 02-01-2000 ஆம் திகதியில் இருந்து தன் சேவையை ஆரம்பிக்கவுள்ளது என்பதை மாணவர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.
A/L 2001, 2002
பொருளியல் : S. வரதராஜன்
வணிகக் கல்வி : V. முரளி
கணக்கீடு : B. முகுந்தன்
இந்து நாகரிகம் S. அருள்நங்கை
தமிழ் : N. பாலா
அளவையியல் : R. P. சர்மா
நாடகமும் அரங்கியலும் : N. நிஷாந்தன்
புவியியல் : கந்தசாமி
கிறிஸ்தவம் : வசந்தன்
ஆரம்பம்: 02-01-2000
ஞாயிறு 3.30 P. M. (ப. நே.)
அனுமதிகளை 01-01-2000 தில் இருந்து பெற்றுக் கொள்ளவும்.
A/L 99
DAY CLASS
ஆரம்பம்: 03-01-2000
திங்கள் 8.30 A.M. (ப.நே)
பொருளியல் கல்லூரி
கே, கே. எஸ். றோட், இணுவில்.
(மத்திய கல்லூரி முன்பாக)
(72148)

## கலந்துரையாடல்

அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்துக்கு அண்மையில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார், (உ)

## தனங்களப்புப்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

ஷெல்கள் வீழ்ந்து வெடித்தைத்தொடர்ந்துஅந்தப்பகுதி மக்களுடன் சேர்ந்து மேற்படி வயோதிபரின் உறவினர்களும் அந்த இடத்தை விட்டுவெளியேறியதாகவும்—

எனினும் சம்பந்தப்பட்ட வயோதிபர் மட்டும் வீட்டை விட்டு வெளியேற மறுத்து அங்கேயே தங்கியிருந்ததாகவும்—

தற்போது அவர் காணாமற் போயுள்ளதாகவும்—தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9-5)

எமது இன்றைய
வெளியீடு
சூப்பர் ஸ்டாரின்
சிறப்புப் பாடல்
தொகுப்புடன்
லதா ரஜனிகாந்தின்
ரஜனி-25
ஸ்பெஷல்
நரேன் வீடியோ
இலக்கம் 140
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. இல. 2675
(சி/10386)

எமது இன்றைய
வெளியீடு!
ரஜனியின்
25 ஆவது ஆண்டுக்
கலைவிழா
(நேற்றுச் சென்னையில்
இடம்பெற்றது)
பிரதிகள் ரூபா 300-00
I.T.N வீடியோ
27, கோயில் வீதி,
கொக்குவில்.
(சி/10385)

A/L 2000
Day Class
கலைப் பிரிவு
ஆரம்பம்:-
02 - 01 - 2000
காலை 10-00 மணி
(பழைய நேரம்)
D. M. I.
யாழ்நகர்.
(சி/10363)

# புலிகள் தரப்பில் மேலும் 21 பேர் பலி

வவுனியா, டிசெ. 29

நடைபெற்று வரும் 'ஓயாத அலைகள் - 3' படை நடவடிக்கையில் தமது தரப்பில் மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ முதல்வன் (விக்டர் லோகநாதன் —கிளிநொச்சி)

★ கபிலன் (விவேகானந்த ராஜா விஜிதரன் — திருகோணமலை)

★ கரும்புலி மேஜர் ஆதித்தன்(பழனியாண்டி சுதாகரன் — பதுளை)

★ கடற்சிறுத்தை கரும்புலி மேஜர் நந்தன் (தர்மராசா தயாளன் — கிளிநொச்சி)

★ ஈழக்கொடியோன் (நல்லைநாதன் பெரியகாந்தன் — நெடுங்கேணி)

★ யாழ்விழி அல்லது யாழ்மொழி (சிவசுப்பிரமணி சுதந்தினி - வவுனியா)

★ இனிதன்(சுப்பிரமணியம் முகுந்தன் — முள்ளியவளை)

★ கரும்புலி மேஜர் மீனா (நடராசா மேனகா - யாழ்ப்பாணம்)

★ கரும்புலி கப்டன் நாகராணி (அருமைநாயகம் ரோகினி - யாழ்ப்பாணம்).

★ அறிவரசன் (கந்தையா குகனேஸ்வரன் - கண்டி).

★ கப்டன் மானவர்மன் (கணேஸ் உதயகுமார் - திருகோணமலை).

★ வீரதர்ஷன் (அருள்நாயகம் விமலேஸ்வரன் - மட்டக்களப்பு).

★ அங்கயற்கண்ணி (கதிரவேல் யோகராணி - வவுனியா).

★ தமிழ்மொழி (தனேஸ் லலிதா - மட்டக்களப்பு).

★ ஜோதிரவி (பாலசுப்ரமணியம் பாலேந்திரன் - மன்னார்).

★ எல்லைப்படை வீரர் மயில்வாகனம் (அமிர்தலிங்கம் ஜெகன் - கிளிநொச்சி).

★ பெருந்தேவன் (சின்னத்துரை செல்வச்சந்திரன் - யாழ்ப்பாணம்)

(மற்றும் நால்வரின் விவரங்கள் 7 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன).

## கண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பிலிருந்து வந்த இந்த ரயில் வவுனியாவில் பயணிகளை இறக்கிவிட்டு அனுராதபுரம் திரும்பிக் கொண்டிருந்த போதே கண்ணிவெடியில் சிக்கியது. அச்சமயம் ரயிலில் பயணிகள் மிகக் குறைவாக இருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

இந்தத் தாக்குதலினால் ரயில்வே திணைக்களத்துக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ரயில் பாதைகளைச் செப்பனிட ஓரிரு நாள்கள் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-10-164)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

திரும்பியிருந்தனர்.

தற்சமயம் திருமலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இக்கப்பல், ஏற்கனவே இங்கு வருவதற்காக அங்கு பதிவு செய்திருக்கும் பொதுமக்களை ஏற்றிக்கொண்டு வெள்ளியன்று திரும்பும் எனத் தற்போது எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-5-9)

விற்பனைக்கு
▶ கலண்டர் வகைகள், டயறி வகைகள்
▶ FAX மெசின் (தொலைநகல்)
▶ குளிர்சாதனப் பெட்டிக்குரிய யூனிற் வகை
▶ குளிர்சாதனப் பெட்டிக்குரிய காஸ் சிலிண்டர்
▶ வெங்காயம் பொதி செய்யும் 'நெற் பாக்'குகள்
▶ மரப்பெட்டிகள், ஐஸ்பழத் தயாரிப்பு குச்சிகள்
▶ ஐஸ்கிறீம் கோண் என்பவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நாதன் களஞ்சியம்
213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி
பக்ஸ் ] -2916
(72164)

பொருளியல் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2002
கலை - வர்த்தகம்
ஆரம்பம்: 2 - 1 - 2000 ஞாயிறு 9.00 A.M.
பொருளியல்; S. வரதராஜன்
வணிகக் கல்வி: V. முரளி
கணக்கீடு: B. முகுந்தன்
இந்துநாகரிகம்: ஜோதீஸ்வரன்
அளவையியல்: R. P சர்மா
தமிழ்: பிரபல ஆசிரியை
புவியியல்: இக்னேசியஸ்
நாடகமும் அரங்கியலும்: N. நிஷாந்தன்
கிறிஸ்தவம்: வசந்தன்
அனுமதியினை 01-01-2000 த்திற்கு முன்பாக பெற்றுக் கொள்ளவும்.
A/L 99 DAY CLASS
ஆரம்பம்: 31-12-99 வெள்ளி 8.00 A.M ப.நே.
(72149)

DCS
DATE CONNECTION SYSTEMS (PVT) LTD
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
(BRITISH ACP RECOGNISED TRAINING CENTER)
புலமைப் பரிசில் திட்டம் 2000/2001
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
மேலதிக விவரங்களுக்கு:
01-01-2000 சஞ்சீவியை எதிர்பாருங்கள்
(72134)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org